# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 15 புதன்கிழமை 31.08.2024 கதிர் 317







# அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஜனாதிபதிக்கு முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேவை!

## தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க

நாட்டில் தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த குடும்ப அரசியல் காரணமாகவே நாட்டு மக்கள் இந்த பாரிய பொருளாதார வீழ்ச்சியை சந்திக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டில் பொலிஸ் மா அதிபர் விவகாரம் முக்கிய பேசுபொருளாக மாறியுள்ளது. உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை சவாலுக்கு உட்படுத்தி பிரதமர் நாடாளுமன்றில் கருத்துரைக்கின்றார். அதனை நாடாளுமன்றத்திற்கு வெளியே கூறுவாராயின் அவர் கைது செய்யப்பட வேண்டும்.

சபாநாயகரும் உயர்நீதிமன்றமும் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறுகிறார்.

2➤



## பொலிஸ் மா அதிபர் நியமனம் குறித்து சபாநாயகர் நாடு திரும்பியதும் ஜனாதிபதி கலந்துரையாடுவார்

### அரச தரப்புத் தகவல்கள் தெரிவிப்பு

வெளிநாடு சென்றுள்ள சபாநாயகர் நாடு திரும்பிய பின்னர் அவருடன் பொலிஸ் மா அதிபர் பதவி தொடர்பாக கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க திட்டமிட்டிருப்பதாக அரசாங்க தகவல்கள் தெரிவித்துள்ளன.

ஈரானின் புதிய ஜனாதிபதியின் பதவி யேற்பு நிகழ்வில் கலந்து

2➤



## பாதுகாப்பு நடவடிக்கை குறித்து உரையாட தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அழைப்பு!

பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மற்றும் தேர்தலுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஆகியோர் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதித் தேர்தலுக்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக இன்று தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அவர்கள் அழைக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ.எல்.ரத்நாயக்க ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தகவல் வழங்குகையில், பொலிஸ் மா அதிபரை நியமிக்க தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அதிகாரம் இல்லை.

அதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு அதற்கு அதிகாரம் உள்ள ஜனாதிபதியிடம் கோரவே முடியும்.

அதன்படி,

2➤

## ஜனாதிபதித் தேர்தல் வாக்குச் சீட்டு அச்சடிப்பிற்கு அரச அச்சகத்திற்கு பொலிஸ் சோதனைச் சாவடி!



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான வாக்குச் சீட்டுகள் அச்சிடப்படவுள்ளதால் அரச அச்சகத்தின் பாதுகாப்பு கருதி பொலிஸ் சோதனைச் சாவடியொன்று ஸ்தாபிக்கப்படவுள்ளதாக அரச அச்சக அதிகாரி கங்கானி லியனகே தெரிவித்தார்.

அதன்படி, அரச அச்சகத்திற்கு 65 பொலிஸ் அதிகாரிகள் கொண்ட பாதுகாப்பு வழங்கப் படவுள்ளதாகவும், 15 ஆம் திகதியுடன் வேட்புமனு தாக்கல் முடிவடைந்ததும் வாக்குச் சீட்டு அச்சடிக்கும் பணி தொடங்கும் எனவும், அதன்போது பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். ஏற்கனவே பொலிஸ் குழுவொன்று அரச

2➤

## அரசியல் பீடக் கூட்டத்தில் 100 எம்பிக்களில் 18 பேர் மாத்திரமே கலந்து கொண்டனர்

### பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தெரிவிப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவினால் நடத்தப்பட்ட அரசியல் பீட கூட்டத்தில் 100 நாடாளுமன்ற உறுப்பினர்களில் 18 பேர் மாத்திரமே கலந்துகொண்டதாக பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் நேற்று (30) தெரிவித்தார்.

மாகாண சபையில் நூற்றுக்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் உள்ளதாகவும், ஐந்து பேர்தான் வந்துள்ளதாகவும், அப்படியான ஒரு கூட்டத்தில் தனியான கட்சியின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளரொருவரை நிறுத்துவதற்கு எடுத்த முடிவு ஓர் அரசியல் நாடகம் எனவும்

2➤

# வைத்தியர் அர்ச்சுனா தொடர்புடைய வழக்குகள் செப்டம்பர் 11ம் திகதிக்குத் தவணையிடப்பட்டன!

யாழ்.சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் முன்னாள் பதில் அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா மீதான வழக்குகள் சாவகச்சேரி நீதிமன்றில், நீதவான் அ.யூட்சன் முன்னிலையில் இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

வைத்தியர்களைத் தொலைபேசியில் அச்சுறுத்தியமை, பேசித்தொந்தரவு செய்தமை உள்ளிட்ட காரணங்களுக்காக வைத்தியர் அர்ச்சுனா மீது ஏனைய வைத்தியர்களால் தொடரப்பட்ட ஐந்து வழக்குகளே இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தன.

இதன்போது வைத்தியர் அர்ச்சுனா சார்பாக சட்டத்தரணி எஸ்.செலஸ்ரின் ஆஜராகியிருந்தார்.

வைத்தியர் அர்ச்சுனா ஊழல், மோசடிகளை தடுக்கும் முகமாகவே கடமை நேரத்தில் வைத்தியர்கள் வெளியே செல்வதனைத் தடுத்திருந்தார் எனவும், வைத்தியர்கள் கடமை நேரத்தில் தனியார் வைத்தியசாலைகளில் பணியாற்றிவிட்டு பின்னர் மேலதிக நேரக் கடமை என்ற பெயரில் மக்களின் வரிப்பணத்தை சூறையாடுவதாகவும் அவர் தனது வாதத்தின் போது சுட்டிக்காட்டியிருந்தார்.

மேலும், மக்களுக்குச் சேவை செய்யவேண்டிய நேரத்தை வீணாக வழக்குகளில் வைத்தியர்கள் கழிக்கிறார்கள் எனவும், இந்த வழக்குகள் இணக்கப்பாடு காணப்படவேண்டிய வழக்குகள் என்பதால் மத்தியஸ்த சபைக்கு பரிந்துரைக்க வேண்டும் எனவும் அவர் மன்றிடம் வேண்டுகோள் விடுத்தார்.

வழக்குத் தொடுநர் சார்பாக சட்டத்தரணி திருக்குமரன் இன்றைய தினம் ஆஜராகியிருந்தார்.

இதன்போது இரு தரப்பு வாதங்களையும் கவனத்தில் கொண்ட நீதவான், அனைத்து வழக்குகளையும் எதிர்வரும் செப்டம்பர் 11ஆம் திகதிக்குத் தவணையிட்டார்.

அதேநேரம் வைத்தியர் அர்ச்சுனா, "சாவகச்சேரி வைத்தியசாலையில் வைத்து வைத்தியர்கள் சிலர் தன்னைத் தாக்கி, தொலைபேசி மற்றும்

2➤

### பாதுகாப்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதியின் செயலாளரிடம் அந்தக் கோரிக்கையை விடுக்க தேர்தல்கள் ஆணைக்குழு நேற்றுத் தீர்மானித்தது.

பொலிஸ் மா அதிபர் அல்லது பதில் பொலிஸ் மா அதிபரை நியமிக்குமாறு ஜனாதிபதிச் செயலாளரிடம் நேற்றுக் காலை கோரிக்கை விடுத்தோம்.

அதன்படி நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதியின் செயலாளரிடமிருந்து எமக்குப் பதில் கிடைத்துள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவின்படி, ஜனாதிபதியின் செயலாளரினால் பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக ஜனாதிபதித் தேர்தலின் பாதுகாப்புக்குத் தேவையான சகல பொலிஸ் உத்தியோகத்தர்களையும் வழங்குவதற்கு தேவையான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரும், தேர்தலுக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபரையும் அழைத்து இது குறித்து இன்று கலந்துரையாட எதிர்பார்த்துள்ளோம், என்று அவர் குறிப்பிட்டிருந்தார். (04)

### ஜனாதிபதித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அச்சகத்தின் பாதுகாப்பிற்கென கடமையில் இருப்பதாக குறிப்பிட்ட அவர், ஜனாதிபதித் தேர்தல் தொடர்பான பல ஆவணங்கள் தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அரச அச்சகத்தின் பாதுகாப்பு குறித்து ஆராய்வதற்காக பொலிஸ் அதிகாரிகள் குழுவொன்று அரச அச்சகத்திற்கு வருகை தந்ததாகவும், தேர்தல் தொடர்பான அச்சிடல் பணிகளுக்கு அரச அச்சக அலுவலக ஊழியர்கள் தயார் நிலையில் உள்ளதாகவும் அரச அச்சக அதிகாரி மேலும் தெரிவித்தார். (ரெஜ-81)

### பொலிஸ்மா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொள்வதற்காக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன ஈரானுக்கு புறப்பட்டு சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பொலிஸ் மா அதிபர் பதவி தொடர்பான நெருக்கடி குறித்து சபாநாயகர் மற்றும் பிரதம நீதியரசர் ஆகியோர் இணைந்தே தீர்வு காண வேண்டும் என இதற்கு முன்னர் தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும், இது தொடர்பில் மேற்கொள்ள வேண்டிய எதிர்கால நடவடிக்கைகள் குறித்து சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன நாடு திரும்பியதும் அவருடன் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கலந்து பேசி, தீர்வொன்றை எட்ட விரும்புவதாகவும் அரசாங்க தகவல்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ரெஜ-80)

### அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இலங்கையில் அவ்வாறான பேச்சுவார்த்தை முறைமை ஒன்று இல்லை. இவ்வாறான பேச்சுவார்த்தைகளில் உயர்நீதிமன்றம் பங்குபற்றாமல் உள்ளதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

பொலிஸாரைப் பயன்படுத்தி அரசியல் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முனைகின்றார். அதற்கு முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனின் தேவை அவருக்கு மிகவும் அவசியமாகவுள்ளது, இவ்வாறு அநுரகுமார திசாநாயக்க தெரிவித்துள்ளார். (04)

### அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த தீர்மானமானது தனிப்பட்ட சுயநலம் கொண்ட பேரழிவுத் தீர்வு எனவும், மகிந்த ராஜபக்ஷ இந்த சிக்கலை சீர்படுத்துவார் என தாம் நம்புவதாகவும் அவர் தெரிவித்தார்.

மொட்டு கட்சியின் பெரும்பான்மையானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்க எடுத்த தீர்மானத்தில் எவ்வித மாற்றமும் இல்லை என இராஜாங்க அமைச்சர் தெரிவித்ததுடன், எஸ்.எம். சந்திரசேன மற்றும் ஷெஹான் சேமசிங்க ஆகியோர் தாம் ஜனாதிபதிக்கு ஆதரவளிக்க தீர்மானித்தது போன்று எஞ்சிய பெரும்பான்மையினரும் எதிர்காலத்தில் ஜனாதிபதியை வெற்றிபெறச் செய்ய பாடுபடுவார்கள் எனவும் தெரிவித்தனர். (ரெஜ-82)

### வைத்தியர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பணத்தைப் பறித்தனர்" என வைத்தியர்கள் மீது தொடுத்த வழக்கும் இன்று விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

அனைத்து வழக்குகளினதும் விசாரணை அறிக்கைகளையும் சமர்ப்பிக்குமாறு பொலிஸாருக்கு அறிவுறுத்திய நீதவான், வழக்கு விசாரணையை எதிர்வரும் செப்டெம்பர் 11 ஆம் திகதிக்குத் தவணையிட்டார். (01)

## பால்மாவின் விலை மாறலாம்!

பால்மாவின் விலையை குறைப்பது தொடர்பாக பால்மா இறக்குமதியாளர்களுடன் அடுத்த சில தினங்களில் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக வர்த்தக மற்றும் வர்த்தக பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இன்று நடைபெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்படி, பால் மாவுக்கான விலையை ஓரளவு குறைக்க முடியும் என நம்புவதாகவும், விலையை கணக்கிடுவதற்கு நுகர்வோர் அதிகாரசபைக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளதாகவும், நுகர்வோருக்குத் தேவையான சலுகைகளை வழங்குவதற்கு இறக்குமதியாளர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி வருவதாகவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (04)

## முட்டை இறக்குமதியை தொடர்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது

முட்டை இறக்குமதியை தொடர்ந்தும் மேற்கொள்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதுவரை முட்டை இறக்குமதி செய்ய வழங்கப்பட்ட கால அவகாசம் ஏப்ரல் 30 ஆம் திகதியுடன் முடிவடைந்திருந்த நிலையிலேயே தொடர்ந்தும் முட்டையை இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதனையொட்டி, வர்த்தகம் மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னாண்டோ சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

சந்தை விலையை நிலைநிறுத்தவும், கேக் உள்ளிட்ட முட்டை உற்பத்தித் தொழிலுக்குத் தேவையான முட்டைகளை வழங்கவும் முட்டைகளை இறக்குமதி செய்ய இந்த முன்மொழிவு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது

2024 மார்ச் 18 திகதியிட்ட அமைச்சரவை தீர்மானத்தின்படி, அரச (பொது) வர்த்தக கூட்டுத்தாபனத்தினால் 224 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தன. இவற்றில் 95 வீதமானவை லங்கா சதொசவின் விற்பனை வலையமைப்பின் ஊடாக ஒரு முட்டை 37 ரூபா எனும் அடிப்படையில் நுகர்வோருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரெஜ-83)

## அஞ்சல் மூல வாக்குகளுக்கான விண்ணப்பம் தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தல்!

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் அஞ்சல் மூல வாக்குகளுக்கான விண்ணப்பம் தொடர்பான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

போலி விளம்பரங்களில் சிக்கிக்கொள்ளாமல், தேர்தல் ஆணையத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பதிவு செய்து அந்தத் தகவல்களின்படி செயல்பட வேண்டும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பல்வேறு சமூக ஊடகங்கள் ஊடாக பரப்பப்படும் விளம்பரங்கள் தொடர்பாக, ஆணைக்குழுவிற்கு எந்தப் பொறுப்பும் இல்லை எனவும் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் பொய்யானவை எனவும், அவை மக்களைத் தவறாக வழிநடத்துவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் காலம் எதிர்வரும் ஒகஸ்ட் 5 அம் திகதியுடன் நிறைவடையவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (04)

## சஜித்தும் கட்டுப்பணம் செலுத்தினார்!

*ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளராக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பெயரிடப்பட்டுள்ளார்.*

*கட்சியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார உள்ளிட்ட குழுவினர் இன்று காலை தேர்தல்கள் ஆணைக்குழுவுக்குச் சென்று ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாச போட்டியிடுவதற்கான கட்டுப்பணத்தைச் செலுத்தியுள்ளனர்.*

*(04)*




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட




காலைக்கதிர் TV
YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com



## நல்லாந்தழுவை முஸ்லிம் ஆரம்பப் பாடசாலையின் மாணவர்கள் சதுரங்கப் போட்டிகளில் சாதனை

(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ் )

மாவட்ட மட்டத்தில் இடம்பெற்ற 2024ம்ஆண்டிற்கான திறந்த சதுரங்க போட்டியில் புத்தளம் நல்லாந்தழுவை முஸ்லிம் ஆரம்பப் பாடசாலையின் தரம் 2 மற்றும் 3 இலிருந்து பங்குபற்றிய 36 மாணவர்களில் 27 மாணவர்கள் மாகாண மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

இதில் மாவட்ட சம்பியனாக 7 வயதிற்குட்பட்ட பிரிவில் எம்.யூ அஹமட் மற்றும் 9 வயதிற்குட்பட்ட பிரிவில் எம்.ஐ உமைர் ஆகிய இருவரும் தெரிவாகி சாதனையை படைத்துள்ளார்கள் என பாடசாலையின் அதிபர் எம்.எம் /ஹதைபா தெரிவித்துள்ளார்.

இவர்களின் சாதனைக்கு இவர்களைப் பயிற்றுவித்த ஆசிரியர் அப்ரீத், அவருக்கு உறுதுணையாக இருந்து செயற்பட்ட ஆசிரியர் சுக்ரி மற்றும் பாடசாலையின் உப அதிபர் ஏ ஆர்.எம் புவாஸ் ஆகியோருக்கும் வெற்றி பெற்ற மாணவர்கள் அனைவருக்கும் தமது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் பாடசாலையின் நிர்வாகம் சார்பாக அதிபர் எம்.எம் /ஹதைபா தெரிவித்துள்ளார்.

## ஊடகத் தயாரிப்புக்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு கொழும்பில்

(ஹஸ்பர் ஏ.எச்)

இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றம் ஏற்பாடு செய்த ஊடகத் திட்டம் தொடர்பிலான கௌரவிப்பு நிகழ்வொன்று கொழும்பு, வெள்ளவத்தையில் உள்ள தனியார் ஹோட்டலில் (27,28) இரு நாட்கள் இடம் பெற்றது.

தெரிவு செய்யப்பட்ட பிரதேச ஊடகவியலாளர்கள், கலைஞர்கள் இதில் பங்கேற்றனர். இதன்போது தொடர்ந்தும் இக்குழு வலையமைப்பு ஊடாக எதிர்காலத்தில் செயற்படுவது பற்றியும் கலந்துரையாடப்பட்டது.

கடந்த காலங்களில் கருத்துச் சுதந்திரம், தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பில் ஊடகத் தயாரிப்புக்களை மேற்கொண்டவர்கள் இதன்போது சான்றிதழ் மற்றும் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்கள்.

இந்த நிகழ்வில் செயற்கை நுண்ணறிவு தொடர்பிலான பயிற்சியினை இலங்கை ஒளிபரப்புக் கூட்டுத்தாபன நிகழ்ச்சித் தயாரிப்பாளர் இஸ்பஹான் சரீப்தீன் வழங்கியதுடன் நிகழ்நிலைக் காப்புச் சட்டம், கருத்துச் சுதந்திரம் தொடர்பிலான தெளிவுபடுத்தல்களை சட்டத்தரணி சந்தீப கமதிகே வழங்கினார்.

குறித்த நிகழ்வில் பிரதம அதிதியாக அததெரன ஊடகவியலாளர் கே.சி. சாரங்கவும், இலங்கை அபிவிருத்திக்கான ஊடகவியலாளர் மன்றத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி அஸாட் முஸ்தபா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.






## மிதி வெடி

சிலை வைக்கிறதெண்டாலே சீரழிஞ்ச வேலை தான் பாருங்கோ…!

பொதுவா ஒரு இடத்தில சிலை ஒண்டை வைக்கிறதெண்டா அதுக்கு அனுமதி – அது, இதுவெண்டு ஊரிப்பட்ட "போர்மாலிற்றீஸ்"! ஆனாப் பெரிய பள்ளிக்கூடத்தில சிலை வைக்கிறதெண்டா அது பெரிய "பொலிற்றிக்ஸ்."

வைச்ச சிலையை இடிச்சுப்போட்டு அவை பட்டபாடு ஒரு புறமிருக்க, அதுக்குப் பதிலாக் கட்டின சிலைய வைச்சுக் காய் நகர்த்தின பெரிய ஆசிரியர்மார் எல்லாரையும் பற்றி ஊர் அறியும். இப்ப மறுபடியும் அங்க ஒரு சிலை அரசியல் ஓடத் தொடங்கியிருக்கு….

அங்க இருக்கிற அறப்படிச்ச சில பேருக்கு அங்க என்னவெண்டாலும் சரியா நடந்தால் நித்திரை வராதாம் பாருங்கோ…. ஏதோ ஒரு விதத்தில குழப்பியடிச்சுக் கொண்டிருப்பினம். நல்லதோ… கெட்டதோ… "தானும் ஒரு ஆளாம் – தவிடும் ஒருகொழுக்கட்டையாம்" எண்டு எல்லாத்துக்குள்ளையும் தலை போடுற ஆக்களாலதான் அங்க பிரச்சினையாம்…!

இராமநாதனார் காணி குடுத்து "கம்பஸ்" கட்டுப்பட்டு 50 வருசம் முடியப் போகுதாம். தொடங்கேக்க முதலாவது பீடங்களில ஒண்டா விஞ்ஞான பீடத்தைத்தான் ஆரம்பிச்சவை எண்டு சொல்லிக் கொண்டு விஞ்ஞான பீடக்காரர் பொன்விழாக் கொண்டாட்டங்களில கொஞ்சம் முனைப்புக் காட்டியிருக்கினம்.

அந்தத் திட்டங்களில ஒண்டா பொன்விழாச் சிலை ஒண்டை வைக்க வேணும் எண்டு சொல்லி, பீட அதிபதிக்குக் கடும் விருப்பமாம். அவர் தான் செய்யுறமாதிரி நேரடியாக் காட்டிக்கொள்ளாமல் பொன்விழாக் கொண்டாட்டத்துக்கெண்டு அமைச்ச குழுவுக்கால காய் நகர்த்த வெளிக்கிட்டிருக்கிறார். என்னதான் சொன்னாலும் படிச்சவை, படிச்சவ தான் பாருங்கோ… தனக்குச் சம்மந்தமே இல்லாத மாதிரி இந்தாள் காய் நகர்த்த, மற்றப் பக்கத்தலயும் படிச்சவை "பாம்பின் கால் பாம்பறியும்" எண்டுமாப் போல அந்தாள் செய்யுறதுக்கு நாங்கள் விடமாட்டம்!, எண்டு கொம்பு சீவிக் கொண்டு நிக்கினமாம்…..

இப்பிடித்தான் கொஞ்சக் காலத்துக்கு முன்னம், இராமநாதன் பரம்பரையில வந்துதித்தேன் பேர்வழி எண்டு சொல்லிக் கொண்டு, "கம்பசு" க்குள்ள ரெண்டு சிலை வைக்கிறதுக்கு ஒரு பெரிய ஆசிரியர் வெளிக்கிட்டவராம்…… வணக்கத்துக்குரிய ஆக்களை வணங்கிற இடத்தில தான் வைக்க வேணும் எண்டு பே(ய)ரவை சொல்லிப் போட்டுதாம். வேற வழியில்லாமல் கோயிலுக்குள்ள தான் சிலை வைச்சவையாம்….

இப்பிடியே சிலை வைச்சுக் கொண்டு போனால்…… எத்தினை சிலை எண்டு வைக்கிறது? சும்மாவே "கம்பஸ்"ஐ நட்டு நிமித்தினது தான் தான் எண்டு பீத்திக் கொண்டு திரியிற "வாழ்நாள்" எல்லாத்துக்கும் சிலை வைக்க வேண்டியெல்லோ வரும்….

அதை விடுங்கோ…. உந்தப் பெரிய பள்ளிக் கூடத்தைப் பற்றியும், தமிழரசுக் கட்சியைப் பற்றியும் நான் கதைக்கிறேல்ல எண்டு இருந்தனான்… விடுகினமில்லை….

உந்தச் சிலை விசியத்தில குத்தி முறியிற பெரிய ஆசிரியர் ஒருத்தருக்கு "பெட்டிசென் பேராசிரியர்" எண்டு பேர் வைச்சாலும் தகும் பாருங்கோ…. தனக்குச் சம்மந்தமே இல்லாத விசியங்களில எல்லாம் மூக்கை நுழைக்கிறதும், பெட்டிசன், பெட்டிசனா எழுதிப் போடுறதும் தான் வேலையாம்! அறிவான – அழகான அவர் இப்பப் பெரிய பள்ளிக் கூடத்தை விட்டுட்டு மாநாகரத்துக்குள்ளையும் தேவையில்லாத வேலை ஒண்டைப் பாத்து வாங்கிக் கட்டிப் போட்டு இருக்கிறாராம்.

நல்லூரில கொடி ஏறினால் முழு யாழ்ப்பாணத்துக்கும் கொண்டாட்டம் தானே? யாழ்ப்பாணம் என்ன தமிழ் பேசும் நல்லுலகம் முழுவதும் கொண்டாடுற ஒரே கோயில் நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தானே? உள்ளூரிலயும் சரி, வெளியூரிலயும் சரி அந்த 25 நாளும் கொண்டாட்டம் தான்!

காலங்காலமா நல்லூர்த் திருவிழாவுக்குத் தேவையான அத்தனை வசதிகளையும் ஏற்படுத்திக் குடுத்து – சொல்லப் போனால் அதில முதலைப் போட்டு கோடிக் கணக்கில வருமானம் பாக்கிறது மாநகர சபைதான். அதிலயும் ஒரு ஞாயம் இருக்குது பாருங்கோ… உள்ளூராட்சி அமைப்புக்கள் தங்களுக்கு வருமானம் ஈட்டக் கூடிய வழிவகைகளைப் பாத்துக் கொள்ளுறது வழமை தானே?

ஆனா, வருகிற வருமானத்தில "கொப்பிக்குப்" புறம்பாக இடம் ஒதுக்கிறதில இருந்து, "டிக்கற்" குடுக்கிறது வரைக்கும் ஒருபக்கத்தால நல்லா உழைச்சுக் கொண்டிருந்தவை. இப்ப ஆணையிடுற இடத்துக்குப் புதுசா வந்தவர், "அண்ட கிறவுண்ட் டீலிங்" வச்சிருந்த எல்லாரின்ர "ஜீவனை"யும் அடக்கிப் போட்டாராம். பினாமிகள் எல்லாற்றை வாலும் ஒட்ட நறுக்குப்பட்டுப் போச்சுதாம்….

நாட்டில எண்டால் என்ன அலுவலகத்தில எண்டால் என்ன தலை மாறினால், அப்பிடியே வாலுகளையும் மாத்திறது வழமை தானே? ஆணையிடுற இடத்துக்குப் புதுசா வந்தவரும், வந்தும் வராததுமா பழையவரின்ற பினாமிகள் அத்தனையையும் தூக்கிக் கடாசிப்போட்டாராம்…

நல்ல வரும்படி கண்டு ருசிப்பட்டுப் போயிருந்தவைக்கு வயித்தில அடிச்சாக் கோவம் வரத்தானே செய்யும்….?

"நல்லூரில நான்… நாவாந்துறையிலும் நான்… " எண்டு நாளுக்கொரு படம் விட்டுக் கொண்டிருந்தவைக்குப் பினாமிகளின்ர காத்தும் கழட்டுப்பட்ட உடன தாங்க முடியேல்ல….

பெரிய பள்ளிக் கூடத்தில "பெட்டிசனுக்கு" பெயர் போன பெரிய ஆசானிட்டைப் போய், அவரும் அந்த இடத்துக்காரன்தான் எண்டு மண்டையக் கழுவி, வழக்குப் போட வைச்சிருக்கினம்… போதாக்குறைக்குப் படிச்சவை பிழையாச் செய்யமாட்டினம் எண்டு நம்பவைச்சு தங்களோட பள்ளிக் கூடத்தில ஒண்டாப் படிச்ச ஒண்டுரெண்டு பேரையும் துணைக்குச் சேர்த்திருக்கினம்…..

கல்விசாரா ஊழியர்கள் போரட்டம் நடத்த, நான் என்ர "கார்"ல தான் போக வேணும்!, எண்ட மாதிரி நல்லூர்த் திருவிழாவுக்குள்ள வீதிய மூடக் கூடாது… நாங்கள் எங்கட வாகனத்திலதான் போய் வருவம் எண்டு தொடங்கி, இல்லாத பொல்லாத காரணங்கள எல்லாம் சொல்லி வழக்கொண்டைப் போட்டு, இப்ப வாங்கிக் கட்டிப் போட்டு இருக்கினமாம்…..

நல்லூரான் நல்லவன் – சோலிக்குப் போமாட்டான். வந்தா விடமாட்டான்…!!!

நரமுனி

## விடாமுயற்சியால் சாதித்துக் கொண்டிருக்கும்

# பெண் தொழில் முயற்சியாளர் சிவலோகநாதன் சயிலா

பேட்டி கண்டவர் –
எம்.கோசலா
ஊடகக் கற்கைகள் துறை
யாழ்.பல்கலைக்கழகம்





விடாமுயற்சி என்பது உள்ளவரை ஒருவரது வாழ்வில் வெற்றி என்பது வெகு தொலைவில் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். தன் மீது நம்பிக்கை கொண்ட ஒவ்வொருவரும் எத்தகைய கடினமான சவால்களையும் தமக்கு சாதகமாக மாற்றி அமைத்துக் கொள்வார்கள் என்பதுதான் உண்மை.

அந்த வகையில் தனது இக்கட்டான சூழ்நிலைகளையும் தனக்கான ஒரு அடையாளமாக மாற்றிக் கொண்டவர் தான் தற்போது தெல்லிப்பளை பிரதேசத்தில் வசித்து வரும் LUCKEY MULTY PRODUCTION இன் உரிமையாளர் சயிலா சிவலோகநாதனோடு நேரில் கலந்துரையாடியது மகிழ்ச்சிக்குரிய தருணமாகும்!








**கோசலா :** உங்களுக்கு தையல் துறையில் எவ்வாறு ஆர்வம் ஏற்பட்டது?

**சயிலா:** நான் எனது இளம் வயதில் கணவரை இழந்ததேன். நான்கு பெண் பிள்ளைகளுக்கு தாயான நான் பாரிய பொருளாதார நெருக்கடி ஏற்பட்ட சூழலில் என்ன செய்வது? பிள்ளைகளை எவ்வாறு வளர்த்தெடுப்பது? அவர்களது எதிர்காலம் எவ்வாறு அமையப்போகிறது? என பல கேள்விகளுக்கு பதில் தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தேன்.

அப்போது தையல் தொழில் என்னை காப்பாற்றும் என்ற தன்நம்பிக்கையில் முதல் அடியினை எடுத்து வைத்தேன்.

அன்றைய காலத்தில் சாதாரண குடும்பத்து பெண்களுக்கு எல்லாம் பெரிய முதலின்றி செய்யக்கூடிய தொழிலாகவும் வருமானத்தை ஈட்டித் தருகின்ற தொழிலாகவும் தையல்தொழிலே காணப்பட்டது. அதனால் அத்தொழிலில் ஆர்வம் ஏற்பட்டது

**கோசலா :** இத்தொழிலின் உங்களது ஆரம்பகட்ட அனுபவம் எவ்வாறு இருந்தது?

**சயிலா:** நான் எந்தவொரு முறையான கற்றலும் இன்றி அனுபவ அறிவினை மட்டும் கொண்டு எனது தொழிலை 23 வது வயதில் ஆரம்பித்தேன். எனது இந்த முயற்சியினால் எனது பிரதேசத்தில் நல்ல வரவேற்பு கிடைத்தது. அதனை ஒரு உந்துசக்தியாக எடுத்துக் கொண்டு குழந்தைகள், சிறுவர்களுக்கான ஆடைகளினை படிப்படியாக தைத்து கடைகளுக்கு விநியோகிக்கத் தொடங்கினேன்.

எனது அயராத உழைப்பிற்குக் கிடைத்த முதலாவது அங்கீகாரம் தான் அது. அதனால் தொடர்ந்தும் தையல் தொழிலை மேற்கொண்டு எனது தொழிலை விரிவுபடுத்தினேன். அதுவரை காலமும் வாடகை நிலத்தில் வசித்து வந்த எனக்கு சொந்த இடமான தெல்லிப்பளையில் மீளக் குடியேறுவதற்கு வழி கிடைத்தது. இவ்வாறு எனது ஆரம்பகட்ட அனுபவம் இருந்தது.

**கோசலா :** நீங்கள் தையல் தொழில் மட்டுமில்லாமல் வேறு தொழில்களிலும் ஈடுபடுவதாக அறிந்தேன் அதைப் பற்றிக் கூறுங்கள்?

**சயிலா:** ஆம். நான் ஆரம்பத்தில் தையல் தொழில்தான் செய்து கொண்டிருந்தேன். எனக்கு வருமானம் போதவில்லை ஆதலினால் வேறு தொழிலும் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டது.

நான் புரொய்லர் கோழிகளை வளர்த்து வந்தேன். அதன் மூலமாகவும் சிறந்த பலனைப் பெற்றுக் கொண்டேன். அதுமட்டுமில்லாமல் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக கேள்விக்குறியான பொருட்களையும் எனது உற்பத்தியில் சேர்த்து இணைத்து கொண்டேன்.

அந்த வகையில் கொரோனா காலத்தில் அனைவருக்கும் முகக் கவசம் தேவைப்பட்ட போது நாளொன்றுக்கு நூறு முகக் கவசங்களைத் தைத்து அதில் இலாபம் கண்டு கொண்டேன்.

பெற்றோல் இல்லாத காரணத்தினால் மோட்டார் சைக்கிளுக்கு பதிலாக சைக்கிள்களை உபயோகிக்கும் போது சைக்கிளுக்கு தேவையான இருக்கை கவர்களையும் தைத்து விற்று எனது வளர்ச்சியை

(6ஆம் பக்கம் பார்க்க...)



# ‘பசுமை இலங்கை’ நிகழ்ச்சி திட்டத்தின் ஒரு நபர் - ஒரு மரக்கன்று செயற்றிட்டம்





(சர்ஜ/ன் லாபீர்)

பசுமை இலங்கை நிகழ்ச்சித் திட்டத்தில் - ஒரு நபர் ஒரு மரக்கன்று - எனும் தொனிப் பொருளின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலக அலுவலர்கள் ஒவ்வொருவரின் பிறந்தநாள் நினைவாகவும் அன்பளிப்புச் செய்யப்பட்ட மரக்கன்றுகளை பொது இடங்களில் நடும் நிகழ்வு நேற்று (30) சம்மாந்துறை அல்-அஸ்ஹர் வித்தியாலயத்தில் பாடசாலை அதிபர் ஏ.ஜப்பார் தலைமையில் பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா கலந்து கொண்டு மரக் கன்றுகளை நாட்டினார்.

இந்நிகழ்வில் பிரதேச செயலக வெளிக்களப் பிரிவு பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.சி.எம் நிசாம், சுற்றாடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான ஏ.கே.பாத்திமா சாமிலா, ஏ.எல் சாஜிதா மற்றும் பாடசாலையின் பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.





## சிறுவர் பிரச்சினைகளை அறிக்கையிடும்போது பின்பற்ற வேண்டிய நன்னெறி முறைகள் பற்றிய 3 நாள் வதிவிடச் செயலமர்வு மட்டக்களப்பில்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

“சிறுவர் பிரச்சினைகளை அறிக்கையிடும்போது பின்பற்ற வேண்டிய நன்னெறி முறை” என்ற தலைப்பில் மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டத்திலுள்ள தேரிவு செய்யப்பட்ட ஊடகவியலாளர்களுக்கான மூன்று நாள் வதிவிடச் செயலமர்வு மட்டக்களப்பு கல்லடியில் உள்ள தனியார் விடுதியில் திங்கள் முதல் இன்றுவரை நடைபெற்றது.

இப்பயிற்சியினை ‘எங்குமுள்ள சிறுவர்களையும் சூழலையும் பாதுகாத்தல்’ அமைப்பானது யுனிசெப்பின் நிதி உதவியுடன் ஏற்பாடு செய்திருந்தது.

இப் பயிற்சியில் சிறுவர் உரிமை சமவாயம், சிறுவர் துஷ்பிரயோகம், சிறுவர் துஷ்பிரயோகம் பற்றிய ஊடகங்களின் தாக்கம், சிறுவர் வன்முறைக்கு எதிராக புகாரளித்தலில் உள்ள சட்டம் மற்றும் நெறிமுறைகள், சிறுவர் வன்முறைக்கு எதிரான செய்தி அறிக்கை, துஷ்பிரயோகத்திற்கு உள்ளான சிறுவர்களை நேர்காணல்,நேரலை சிறுவர் துஷ்பிரயோகம் போன்றவை பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்தக்கூடிய பல பயன் தரும் கலந்துரையாடல்கள் இடம்பெற்றன.இச்செயலமர்வில் வளவாளர்களாக அமைப்பின் நிறைவேற்று இயக்குனர் மஹ்ஷூப், கலாநிதி எம்.ஸி.றஸ்மின், டொக்டர் சஹாரா தர்சனி ஜெயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நான்கு வகை நிலத்திலும் காணி விற்பனைக்கு!
வடக்கு (யாழ்ப்பாணம்) - கிழக்கு (மட்டக்களப்பு) - மலையகம் (பதுளை)

கி.அரியாலை
மருதம்
வயலுடன் கூடிய மேட்டுக்காணியும் பண்ணை வீடும் பொழுதுபோக்குகளும்...!

எழுதுமட்டுவாழ்
முல்லை
மரங்கள் நிறைந்த இயற்கை சூழலில் ஓய்வுகால வீட்டிற்கான காணித் துண்டுகள்...!

மட்டக்களப்பு
நெய்தல்
கடலும் ஆறும் அருகருகே அமைந்த மீன்பாடும் தேன்நாட்டில் விடுமுறை வீட்டிற்கு...!

அப்புத்தளை
குறிஞ்சி
மலைகளின் நடுவில் இளிர்ந்த பிரதேசத்தில் வாசனைத் திரவியமும் சுற்றுலா விடுதியும்...!

காணி கொள்வனவிற்கு : 0777 43 5557

# படகுத் தரிப்புத்துறை அமைக்க பூர்வாங்க ஏற்பாடுகளை முன்னெடுக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்தார்!

(அஸ்லம் எஸ்.மௌலானா)

அம்பாறை மாவட்ட மீனவர்களின் நீண்ட காலத் தேவையாக இருந்து வருகின்ற படகுத் தரிப்புத் துறையை அமைப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை உடனடியாக ஆரம்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சம்மந்தப்பட்ட திணைக்களங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார். ஐக்கிய தேசிய கட்சியின் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களுக்கான இணை அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவருமான கலாநிதி ஏ.எம். ஜெமீல் ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளை ஏற்று அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளார்.

இதற்கான எழுத்து மூல கோரிக்கை மற்றும் திட்ட வரைபை கலாநிதி ஜெமீல் ஜனாதிபதியிடம் சமர்ப்பித்துள்ளார். அம்பாறை மாவட்ட ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடுகின்ற இயந்திரப் படகுகளை பாதுகாப்பாக நிறுத்தி வைப்பதற்கு இப்பகுதியில் படகுத் தரிப்புத்துறை ஒன்று இல்லாதிருப்பதால் அப்படகுகளை மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள வாழைச்சேனை படகுத் துறைமுகத்திலேயே நிறுத்தி வைக்க வேண்டியுள்ளது. இதனால் அவற்றின் உரிமையாளர்களும் மீனவர்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இதனைக் கருத்தில் கொண்டே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் மர்ஹூம் எம்.எச்.எம். அஷ்ரப், அமைச்சராக பதவி வகித்த காலப்பகுதியில் சாய்ந்தமருதில் படகுத் தரிப்புத் துறையொன்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்தார்.

எனினும் ஒலுவில் பகுதியில் துறைமுகம் அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டதால் சாய்ந்தமருதில் படகுத்துறை அமைக்கும் நடவடிக்கை கைவிடப்பட்டிருந்தது.

ஆனால் ஒலுவில் பகுதியில் அமைக்கப்பட்ட துறைமுகம் பயன்பாட்டுக்கு உகந்ததாக அமையாத காரணத்தால் அங்கும் படகுகளை தரித்து வைக்க முடியவில்லை.

இந்நிலையில் பல தசாப்த காலமாக ஆழ்கடல் மீனவர்கள் எதிர்நோக்கி வருகின்ற பாரிய சவாலான பிரச்சினைக்கு தீர்வு காணும் வகையில் ஐ.தே.க. அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களுக்கான இணை அமைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவருமான ஏ.எம். ஜெமீல், இவ்விடயத்தை ஜனாதிபதியின் நேரடி கவனத்திற்கு கொண்டு சென்று, அதற்கான முன்மொழிவை சமர்ப்பித்திருந்தார். இதன் பிரகாரம் சாய்ந்தமருதில் படகுத் தரிப்புத்துறையை அமைப்பதற்கு தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதாக உறுதியளித்துள்ள ஜனாதிபதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சாய்ந்தமருது முகத்துவாரம் அமைந்துள்ள பாலத்தை போதியளவு உயர்த்தி நிர்மாணிப்பதற்கான பூர்வாங்க ஏற்பாடுகளை உடனடியாக முன்னெடுக்குமாறு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அவ்வாறே முகத்துவார தோணாப் பகுதியை தேவையானளவு தோண்டி ஆழமாக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு கரையோரம் பேணல் திணைக்களத்திற்கு ஜனாதிபதியினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.







# பெண் தொழில் முயற்சியாளர்......



மேம்படுத்திக் கொண்டேன். அதுமட்டுமில்லாமல் அரசாங்க நிறுவனத்திடம் இருந்து சலவைத் திரவப் பயிற்சியையும் பெற்று, 7 வருடமாக சலவைத் திரவத் தயாரிப்பில் ஈடுபட்டு வருகிறேன்.

**கோசலா :** நீங்கள் மக்களிடம் எவ்வாறு உங்கள் பொருட்களைக் கொண்டு சென்று சேர்க்கின்றீர்கள் என்பது தொடர்பாகக் கூற முடியுமா?

**சயிலா:** நான் தயாரிக்கும் சலவைத் திரவ உற்பத்தி, கைப்பை, தலையணை போன்றவற்றை நோர்த்வே, ரிசிரி, சிவா கோ போன்ற பெரிய கடைகளுக்கும் உள்ளூரில் உள்ள சிறிய கடைகளுக்கும் மொத்தமாகவும் சில்லறையாகவும் விநியோகித்து வருகின்றேன்.

மேலும் யாழ் மாவட்ட சுயதொழில் முயற்சியாளர்களின் விற்பனைச் சந்தை, ஒவ்வொரு மாதமும் ஐந்து துறைசார்ந்த திணைக்களங்களின் ஊடாக யாழ்ப்பாண பல்கலைக்கழகம், கலாசார மண்டபம், ஒவ்வொரு பிரதேச செயலகங்களிலும் விற்பனைக் கூடங்கள் அமைக்கப்பட்டு விற்பனையானது இடம்பெறுகிறது. இதன் மூலமாகவும் எனது உற்பத்திகளை விற்பனை செய்து வருகிறேன்.

**கோசலா :** உங்களுக்கு கிடைத்த விருதுகள் பற்றி கூறுவீர்களா?

**சயிலா:** எனக்கு 2018 ஆம் ஆண்டு சமுர்த்தி வங்கியினால் சேவை நலன் பாராட்டு விருது வழங்கப்பட்டது.

2022 ஆம் ஆண்டு உற்பத்திப் பொருட்கள் கண்காட்சியும் விற்பனையும் எனும் மூன்றிலும் சிறந்து விளங்கியமைக்கு தெல்லிப்பழைப் பிரதேசசெயலக பிரிவினால் நடாத்தப்பட்ட விருது வழங்கல் விழாவில் சிறந்த பெண் முயற்சியாளருக்கான விருது வழங்கப்பட்டது.

மேலும் 2022 ஆம் ஆண்டு NEWSFIRST-NDB வங்கி ஆகியவற்றினால் நடத்தப்பட்ட பெண் முயற்சியாளர் விருது வழங்கல் விழாவில் வடமாகாண சிறந்த முயற்சியாளர் என்பதில் முதலாவது இடம் கிடைத்தது.

2023 சுயதொழில் ஈடுபடும் பெண்களுக்கான விரு வழங்கலில், உற்பத்தி மற்றும் விற்பனைக்கான விருதும் கிடைத்தது. இவ்வாறு எனக்கு கிடைக்கப் பெற்ற வெற்றிகளுக்கு எல்லாம் எனது கடின உழைப்பு மட்டுமே காரணம்.

**கோசலா :** நீங்கள் வளர்ச்சிப் படிகளை எட்டும்போது எதிர்கொண்ட சவால்கள் பற்றிக் கூறுங்கள்?

**சயிலா:** முறையான கற்றல் இன்மையினால் புதிய தொழிநுட்பங்களை பயன்படுத்துவது என்பது எனக்கு பாரியதொரு சவாலாக காணப்பட்டது. எனினும் எனது விடாமுயற்சியால் அத்தகைய தடைகளையையும் தகர்த்தெறிந்து வெற்றி கணடேன். தொடர்ந்து பணியாளர்களைத் தக்கவைத்துக் கொள்வது என்பது எனக்குப் பெரியதொரு சவாலாக இருந்தது. சொந்த இடத்திற்கு இடம்மாறிச் செல்ல நேரிட்டபோது தையல் பொருட்களை சந்தைப்படுத்துவதிலும் பாரிய சவால்களை எதிர்கொண்டேன்.

'நீ நினைத்தால் முடியாதது எதுவுமில்லை' என்பதை எனது வாழ்வின் மந்திரமாகக் கொண்டு அத்தனை சவால்களையும் எதிர்கொண்டேன்.

**கோசலா :** உங்களது எதிர்காலத் திட்டம் பற்றிக் கூறுங்கள்?

**சயிலா:** தற்போது என்னிடம் 5 பெண்கள் முழு நேரமாகவும் பகுதி நேரமாகவும் வேலை செய்கிறார்கள். எனினும் எனது இலக்கு என்னைப் போன்ற வறுமையில் வாழும் பெண்களுக்கும் மற்றும் தையல் தொழிலில் ஆர்வமாக உள்ள இளம் பெண்களுக்கும் வேலைவாய்ப்பை வழங்க வேண்டும் என்பதாகும். அதற்காக அயராது உழைத்துக் கொண்டிருக்கிறேன். இதற்காக தையல் நிறுவனம் ஒன்றை நிறுவி அதில் 100 பேருக்காவது வேலை வழங்க வேண்டும் எனும் இலக்குடன் பயணித்துக் கொண்டிருக்கிறேன்!







## அன்புள்ள, பறவாதி முழுநீள ஈழத்துச் சினிமா படைப்புகளின் அறிமுகம் நாளை யாழில்!

ஈழத்துச் சினிமாப் படைப்புகளான 'அன்புள்ள', 'பறவாதி' ஆகிய இரண்டு முழு நீளத் திரைப்படங்கள் விரைவில் வெளிவரவுள்ள நிலையில், கருடன் தயாரிப்பு நிறுவனம் வழங்கும் 'அன்புள்ள' திரைப்படத்தின் அறிமுக விழாவும், அதனதும் பழங்குடி மக்களின் வாழ்வியல் சார்ந்த படைப்பான 'பறவாதி' திரைப்படத்தினதும் முன்னோட்டக் காட்சிகளின் வெளியீட்டு விழாவும் நாளைய தினம் வியாழக்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்ப்பாணம் கார்கில்ஸ் சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

'அன்புள்ள' திரைப்படம் கதிரின் எழுத்து, இயக்கத்திலும் 'பறவாதி' அஜந்தனின் எழுத்து, இயக்கத்திலும் உருவாகியுள்ளன.

யாழ். ஊடக அமையத்தில் இன்றைய தினம் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போது, இந்தத் தகவல்களைத் தெரிவித்த படக்குழுவினர், அனைவரையும் நிகழ்வில் பங்கேற்குமாறும் அழைத்தனர்.

எதிர்காலத்தில் வர்த்தக சினிமாவாக முன்கொண்டு செல்வதும், படைப்பார்கள் தங்களது பணிகளை முன்னெடுக்கும் போது எவ்விதத் தடைகளுமின்றி புதிய பாதையில் சர்வதேசப் படைப்பாளர்களுடன் ஈழத்துப் படைப்புகளை இணைப்பதும் தமது நோக்கமென கருடன் தயாரிப்பு நிறுவனத்தின் பணிப்பாளர் எல்றோய் அமலதாஸ் தெரிவித்தார்.

## கலாபூஷணம் விருது விண்ணப்பம் கோரல்

*(கற்பிட்டி எம்.எச்.எம்.சியாஜ்)*

*கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் வழங்கப்படும் கலாபூஷணம் விருதுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.*

*விண்ணப்ப முடிவுத்திகதி வரும் ஒகஸ்ட் 10 ஆம் திகதி ஆகும்.*

*விண்ணப்பிக்க விரும்பும் தகுதியான கலைஞர்கள் முடிவுத்திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பபடிவத்தினையும், துறை சார்ந்த இதர ஆவணங்களையும் தங்கள் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தரிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளார்கள்.*


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா?
கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
JRide Driver: Drive & Deliver
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!